**ஓம் ஈஸ்வராய நமஹ!**

# ரேணுகா தேவியின் மந்திர உபதேசம் குறித்து அகத்தியர் மகான் உரைத்தது

எமதாசான் ஆறுமுகனாரின் அடிதொழுதே உரைக்கின்றோம்.

சிந்தையில் ஏற்றமுறும் ஜீவனும்
மகரந்தத்தால் ஏற்றமுறும் மலர்களும்
அன்பினால் ஏற்றமுறும் ஆன்மாவும்
அறநெறிகளால் ஏற்றமுறும் மானுட வாழ்வும்

விழிகளால் ஏற்றமுறும் பார்வையும்
செவிகளால் ஏற்றமுறும் நல்லாற்றலும்
நாவினால் ஏற்றமுறும் நற்சொற்களும்
கரங்களால் ஏற்றமுறும் நற்செயல்களும்

புவியினைக் காத்தருளும்
புறவாழ்வினையும் காத்தருளும்
மானுடம் காத்தருளும்
யுகமாற்றத்தை ஏற்றருளும்

அகத்தினிலே ஆற்றலுண்டு
ஆதிசக்தியின் ஆற்றலுண்டு
திரைகள் பல விலகி நின்றால்
ஒளிரூப தரிசனமுண்டு.

Gnanalayam

மானுடராய் பிறவி கண்டால்
ஒளிரூபம் காண வேண்டும்
ஆதிசக்தி நாயகியின் அருள் ரூபம் காணவேண்டும்

சிரசினிலே ஒளிர்பவளாம்
ஆற்றல் பல அருள்பவளாம்
ரேணுகா தேவியெனப் புவியினிலே உதித்தவளாம்

சமரசங்கள் புரிந்திடுவார்
சத்யயுகம் மலர்த்திடுவார்
சிரம்தாழ்த்திப் பணிவோர்க்கு
சிகரம்தனை உணர்த்திடுவார்

பிள்ளைகளைக் காத்திடவே
அன்னையாய் அவதரித்தார்
முக்திநிலை அருளிடவே முதன்மையாய் முன்னின்றார்
போற்றிடுவோம் தேவியினை
புண்ணியங்கள் பெருகட்டும்
ஏற்றிடுவோம் நாமம்தனை
அருளாசி நிலைக்கட்டும்

ஞானத்தின் ஆலயத்தில் அருள் ஒளியால் அவதரித்து, ஆன்மாக்கள் விடுபடவும் ஆணவங்கள் கரைபடவும் திரைகள் பல விலகி நின்று மறைபொருளும் ஒளிர்ந்திடவும் நல்லாசி புரிந்திடுவார். மகளாரை ஆண்டிடுவார். கலியுகம் தனிலே அவதரித்திட்ட காரணத்தால் ஆன்மாவினை உணர்ந்திட இயலாது போராடும் மானுடர்கள் ரேணுகா தேவியின் அருள் ஆற்றல் பெற்றிட்டால் எல்லைதனைக்

Gnanalayam

கடந்திடுவர். எழுச்சியுறும் ஆற்றல்களே சத்தியங்;கள் உரைத்திருக்கும். ஞானமது மலர்ச்சியுற்றால் தேவியினை உணர்ந்திடலாம்.

ரேணுகா தேவியின் ஆட்சி காலம் என்பது புவியினிலே மலர்ந்துள்ளது. நஞ்சகற்றும் நாயகனாம் எமது ஆசான் ஆறுமுகனார் அருளிய ஆற்றலின் துணை கொண்டு வட்ட மலர்கள் மலர்ந்திட்டனர். கலச வித்துக்களும் பெருகினர். நிகழ்ந்திட்ட நிகழ்வுகளும், நிகழவுள்ள நிகழ்வுகளும் நிகழ்காலத்தில் அடங்கிவிடும். ரேணுகாதேவியின் ஆட்சி ஏன் மலர வேண்டும்?

ஆறுமுக ஆசானின் ஆட்சி என்பது மானுடர்கள் சிரசினிலே ஏற்றிட்ட நச்சுக் கழிவுகளின் திரைகளை நீக்கியே அருளியது. திரைகள் ஆறும் விலகி நின்றால் ஆன்ம தரிசனம் கிட்டும் எனினும் ஏழாம் திரையெனும் உயரின் கூடும் ஒளியினை மறைபொருளாய் உணர்த்திடும். ஆன்ம ஒளி என்பது உயிரின் கூடு எனும் ஏழாம் திரையினால் மறைபொருள்களாகவே விளங்குகின்றது. எவ்விதம் அத்திரை விலக இயலும்.

அதீத வெப்ப ஆற்றலினால் மாத்திரமே ஏழாம் திரை விலகிட முனையும். வட்ட மலர்கலாய் மலர்ந்து கலச வித்துக்களால் நிறைந்திடும் ஆன்மாக்கள் உயர் ஆன்மாக்களின் ஆற்றலினைக் கொண்டே விடுதலை அடைகின்றனர். குருவாய் செயல்புரியும் மகளார் உயர் ஆன்மாக்களின் அருளாற்றலை ஈர்த்து மானுட ஆன்மாக்களுக்கே பகிர்கின்றார்.

வட்ட மலர்கள் பெருகிடும் தருணத்தில் அதீத ஆற்றலானது வெளிப்பட வேண்டும். மேலும் திரைகள் பலவும் நீக்கமுற வேண்டும். உயிரின் கூடான ஏழாம் திரையானது விலகினால் விழித் திரைகளும் அதன் பதிவுகளும் நீக்கமுறும்.

மாய, கர்ம, ஆணவத் திரைகள் யாவும் உயிரின் கூடாகிய ஏழாம் திரையினைச் சார்ந்தே செயல்புரிந்திடும். மூன்று திரைகளின் படிமன்களை அகற்றி நச்சுக் கழிவுகளை நீக்கிட ஆறுமுக ஆசான் உதவியே நின்றிட்டால் கூடிடும் மானுட ஆன்மாக்கள் விரைந்து ஆன்ம விடுதலைதனை எய்திட வேண்டும். கலியின் வீரியம் கூடிய இத்தருணத்தில் புறப்பணிகளை நீக்கி அகத்தினை ஆராய்ந்து ஆன்மாவினை உணர்ந்துவிட அனைவரும் போராட வேண்டும்.

வெப்ப ஆற்றல் நிறைந்த தேவியானவர் தனது அதீத ஆன்ம ஆற்றலை நல்கி மானுட சிரசுகளைத் தூய்மையுறத்திடுவார். வெப்ப ஆற்றல் கொண்டு ஏழாம் திரை நீக்கப்பட்டால் இருவிழித் திரைகளான ஆறு திரைகளும் எளிதாய் நீக்கமுறும். ரேணுகா தேவியினை தனது சிரசினிலே ஒற்றை அணுவாக ஏற்றுச் செயல்புரியும். மகளார் மானுட ஆன்மாக்களின் தேர்வினை நிகழ்த்திட வேண்டுமெனில் சிரசுக் கழிவுகளை நீக்கி ஆன்மத் துகள்களைப் பிரித்திட உதவிடல் வேண்டும்.

ஒவ்வொரு மானுடரின் சிரசினிலும் யாம் நிலைத்திருப்போம், ஆத்மக் கருக்களைப் பிரித்தருள்வோம். எனினும் விடுபடாத துகள்களை முனைந்தே பிரிந்திடல் வேண்டும். உயிர்க்கூடு விலகத் துவங்கினால் ஆன்மாவின் ஒளியாற்றல் சிரசு முழுவதும் பரவிடும். ஆன்ம ஒளி பெருகினால் இறுதி கலிவட்ட அணுக்களும் பிரிபடும். உயரிய தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டே ரேணுகா தேவியின் ஆட்சிக் காலம் மலர்ந்திடும்.

கலி எல்லையில் காலநேரம் குன்றியே காணப்படுகின்றது. மானுடர்கள் விரைந்து செயலாற்றினால் அழிவினின்று காக்கப்படலாம். அதன்பொருட்டே வீரிய வெப்ப ஆற்றலினைக் கொண்டு ரேணுகா தேவியானவர் அவதரித்துள்ளார். குருவாய் செயல்புரியும் எமது மகளாரை இத்தருணத்தில் ஆட்கொண்டே ஆட்சிபுரிகின்றார். ஒற்றை அணுவே தேவியின் ஆசனமாகும். தேவியின் அவதார நோக்கு என்பது

கலியினை விரைந்து அழிப்பதேயாகும். புறக் கழிவுகளை நீக்கிடவும் உதவிடுவார். அகக்கழிவினையும் நீக்கிட முனைந்திடுவார்.

**தீட்சையானது ஏன் அருளப்படல் வேண்டும்?** ஆன்மா விடுதலை காண வேண்டுமெனில் திரைகள் பல நீங்கிடல் வேண்டும். ஆன்மத் துகள்களும் விடுபட வேண்டும். மூலத்திரை எனப்படும் ஏழாம் திரை விலகினால் அனைத்து துகள்களும் எளிதாய் விடுபடும் என்பதே தாத்பர்யமாகும். ஒளியெனும் தீபச்சுடர் பொருத்தி ஆறுமுக ஆசான் அருளிய தீட்சை குறுகிய மலர்களுக்கு உதவிடவே அருளப்பட்டதாகும். பெருகிடும் மலர்களுக்கு தீவிர ஆற்றலை நல்கியே தீட்சை வழங்கப்படும்.

ஓசை எனும் ஒளிரூபமே தேவியின் ஆற்றல்களை வெளிக் கொணர உதவிடும். ரேணுகா தேவியின் தீட்சை என்பது மந்திர உபதேசமாகவே உருமாற்றம் கண்டிடும். ரேணுகா தேவியானவர் குருவான மகளாருக்கு உபதேசித்து அருளிய மந்திரமே ஈசனையும் ஈர்த்திட்டது. கலியின் எல்லையில் மகளாரின் இறுதிப் பிறவிதனிலே மற்றுமோர் மந்திர உபதேசம் தனை ரேணுகா தேவியிடமிருந்தே ஏற்றிட்டார்.

மந்திர உபதேசம்தனை குருவான மகளார் முழுநிலவின் உச்சமதில் ஏற்றிட்டார். அவ்வுயரிய மந்திர ஓசையடங்கிய சொற்களை உச்சரித்து மந்திர ஓசையடங்கிய மானுடர்களின் ஒற்றை அணுவானது வீரியமடையும். அதீத வெப்ப ஆற்றலை நல்கிடும். மந்திர ஒலியானது செவிகளின் மூலம் உட்சென்றால் ஒற்றை அணுவினையே சென்றடையும். உடன் அதீத வெப்ப ஆற்றலான ஆதிசக்தியின் ஆற்றலைப் பெருக்கிடும்.

ஒற்றை அணுவானது தான் பெற்றிடும் ஆற்றலை சிரசினிலே பரவிடவே வகைபுரியும். முதன்மையாய் நிலைத்துள்ள உயரின் கூடு எனும் ஏழாம் திரையானது உயரிய ஓசையின் வெப்ப அலைகளின் மூலம் உருகத் துவங்கிடும்.

ரேணுகா தேவியே அன்னையாய் நிலைத்து சிரசினிலே வெளிப்படும் ஏழாம் திரையின் நஞ்சுகளை ஏற்றிடுவார்.

ஓங்கிய ஒலி கொண்டு வெளித் தோன்றும் தேவியின் நாமமும் ஆற்றலும் உயிர்க் கூட்டினை உருக்கிடும். உடன் அவை ரேணுகா தேவியானால் ஈர்த்தே அழிக்கப்படும் மிகவும் கடினமான செயலே எனினும் உருகியே ஏற்றிடும் மானுடர்களின் ஏழாம் திரைதனை நீக்கி ஆதிசக்தியாய் அருளினை நல்கி காட்சியளித்திடுவார். ரேணுகா தேவி என்றே உணர்ந்திடுக.

தீட்சைதனை ஏற்றுப் பயின்றிடும் தருணமே சித்தியாகும் இக்கலை என்றுணர்க. ரேணுகாதேவியின் தீட்சை என்பது மானுடர்களால் ஏற்கப்பட்டால் அவர்களது ஒற்றை அணுவானது வீரியமடையும். ஆற்றல் பெருக்கமும் கண்டிடும். உயரிய ஆற்றலை ஏற்று உருகும் கூடு என்பது சிரசினைத் தூய்மையுறுத்திடும். பல்வேறு பதிவுகளையும் நீக்கிவிடும். விடுபடாத கர்ம வினைகளும் எளிதாய்க் கரைந்தே அழிவுறும். உயிர்க்கூடு என்பது கொடிய நச்சுக் கழிவுகளால் உருவானதாகும். ரேணுகா தேவியின் ஆற்றல் கொண்டே அதனை நீக்கிவிட இயலும்.

உயிர்க்கூடு விலகினால் மந்திர ஒலியோசை என்பது உடல் முழுவதும் பரவுவதனை மானுடர்கள் உணர்ந்திடுவர். நரம்பிழைகளே குருதியினை ஏற்றுச் சென்றிடும் மார்க்கமாய் விளங்குகின்றது. மந்திர ஒலியோசை என்பது மகளாரால் தீட்சையாக வழங்கப்பட்டால் அவை நரம்பிழைகளை மீட்டியே சென்றிடும். உடல் முழுவதும் அதிர்வலைகள் பரவுவதனை மானுடர்கள் உணர்ந்திடுவர். பலமுறை ஏற்றிடும் ஆறுமுக தீட்சையினைப் போன்று இத்தீட்சையானது அமைந்திடாது. ஒரு முறையே மந்திர உபதேசம் என்பது ஏற்கப்படல் வேண்டும்.

ரேணுகாதேவியினை உருகிப் பிராத்தனை புரிவோர் யாவரும் ஒற்றை அணுவினையும் உணர்ந்திடுவர். ஆதிசக்தியினையும் அறிந்திடுவர். புற வாழ்வின்

மேன்மை நிலைகள் பெருகிடக் காண்பர். கலி எல்லையில் மானுடர்களுக்கு இறுதியாய் வழங்கப்படுகின்ற இந்நிலை என்பதனை அனைவரும் உணர்ந்து ஏற்றிடல் வேண்டும். கலியின் கொடிய நிலையிலிருந்து மீண்டு, ஆன்ம விடுதலைதனை ஏற்று யுகமாற்ற வித்தாக மாற்றி ஈசத் தொண்டாற்றக் கடவது.

**********

Gnanalayam